**21.09.2021**
CC 105/2017
PW6  Karthick, D/o.Manoharan

**எதிரி தரப்பில் கு.வி:**

27.09.2010ல் நான் ஜிஆர்டி ஹோட்டலில் டிரெய்னிங் பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். நான் திருநகரில் உள்ள ஹோட்டலில் வேலைபார்த்தேன் என்றால் சரியல்ல. நான் வேலை பார்க்கவில்லை. நான் திருநகர் ஹோட்டலில் வேலை பார்த்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாணையில் நான் ஜிஆர்டி ஹோட்டலில் டிரெய்னிங் சென்றேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எதில் கையெழுத்து போட்டேன் என்ற விபரமும் எதற்காக கையெழுத்து போட்டேன் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அசா 1 மதன் குமார் என்பவரை நான ஊரில் பார்த்துள்ளேன் அவரை எனக்குத் தெரியும். அசா 1 எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசா 7 சங்கரேஸ்வரன் கம்யூட்டர் சர்வீஸ் கடை வைத்திருப்பதால் அவரை எனக்குத் தெரியும் என்றால் சரிதான்.